செ.வெ.எண்: 53 / பிப்ரவரி நாள்: 25.02.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## 429 கிராம ஊராட்சிகளில் 26.02.2016 அன்று சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 429 கிராம ஊராட்சிகளிலும் நாளை (26.02.2016) சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டம் அந்தந்த ஊராட்சியின் பொதுவான இடங்களில் நடத்தப்படவுள்ளது.

கிராம சபைக் கூட்டத்தைப் பார்வையிட ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு பற்றாளர் மற்றும் மாவட்ட அளவில் தொகுதி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சிப் பகுதிகளில் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் 2015 -2016-இன் கீழ் கூடுதலாக பயனாளிகளை தேர்வு செய்தல், திடக்கழிவு மேலாண்மை தூய்மைக் காவலர்கள் தேர்வு, பணித்தள பொறுப்பாளர்கள் தேர்வு மற்றும் தொகுப்பு கிராமங்கள் பிரித்தல் ஆகியன ஒப்புதல் பெறுதல், கழிப்பறை இல்லாத குடும்பங்கள் பட்டியல் இறுதி செய்தல், வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கம் தொடர்பாக வாக்காளர் பட்டியலினை வாசித்தல், கால்நடைகளுக்கான கோமாரி தடுப்பூசி பணி மார்ச் 1 முதல் 21 வரை நடைபெறுதல் உள்ளிட்டவை குறித்து ஊராட்சி பொதுமக்கள் முன்னிலையில் ஆலோசிக்கப்படவுள்ளது. எனவே இந்த கிராம சபைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட ஊராட்சியின் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**